நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 256/2024**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| கிராமம் | : | பாலக்காரனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.34PM )

1. நான் தற்போது பலக்காரனூரில் குடியிருக்கேிறன். நான் கூலி வேலை செய்கிறேன். எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் காட்டு பிரச்சினை இருந்து வருகிறது. இது சம்பந்தமாக மேட்டுர் கோர்டில் வழக்கு நடைபெற்று வருகிறது. 04.07.2022 ம் தேதி காலை 9.30 மணி அளவில் காட்டில் மாடு

மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது குமுதவல்லியும், சேதுவராயனும் இருவரும் புல் மற்றும் பூண்டுகளை பிடுங்கி கொண்டிருந்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது எதற்காக பூண்டுகளை பிடுங்கீறிர்கள் என்று கேட்டேன்.

2. அதற்கு குமுதவல்லி என்னை அப்படிதாண்டி தேவடியா என்று சொல்லி கையால் முதுகில் அடித்து கீழே தள்ளி விட்டார். கீழே விழுந்த என்னை சேதுவராயன் என்னை காலால் வலது அல்லையில் எட்டி உதைத்தார். கெட்ட வார்த்தையிலும் என்னை திட்டினார். சண்டையை தமிழ்செல்வன் தடுத்தார். சத்தம் கேட்டு வந்த எனது மகன் ராமலிங்கத்தை சேதுவராயன் கெட்ட வார்த்தையால் திட்டி கீழே கிடந்த கட்டு கம்பியால் எனது மகனின் கழுத்தின் பின்னாலும் முன்னாலும் அடித்துவிட்டார். என் மகனுக்கு உதட்டில் காயம் ஏற்பட்டது.

3. தமிழ்செல்வன் எதிரிகளை அழைத்து சென்று விட்டார். எங்களை சின்ன மகன் திருநாவுக்கரசு கார் மூலமாக மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். போலீசார் மேட்டுர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் கைரேகை வைத்தேன். போலீசார் படித்து காண்பித்தார்கள். அதில் விவரம் எனக்கு தெரியும். எனது மகன் உதட்டில் காயம் ஏறபட்டதால் பேச முடியாமல் இருந்தார். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்(12.50PM.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்(04.05PM)

1. எதிரி குமுதவல்லியின் கணவர் வரதராஜன் கடந்த 1990 ஆம் வருடம் எனது அப்பா மாரிமுத்து மற்றும் எனது சகோதரர்களிடமிருந்து மூன்று ஏக்கர் 9 சென்ட் அளவுள்ள நிலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கான பட்டா சிட்டா உள்ளிட்ட வருவாய் துறை ஆவணங்களை மேற்படி வரதராஜன் தனது பெயருக்கு மாற்றிக் கொண்டு அவர் இருக்கும் வரை மேற்படி நிலத்தில் அனுபவம் செய்து வந்தார் என்றாலும் அவரது இறப்பிற்கு பின்னிட்டு ஆஜர் எதிரிகள் அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

2. எனது பெயரிலோ எனது சகோதரர்கள் பெயரிலோ மேற்படி நிலத்திற்கு பட்டா இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் 9 சென்ட் நிலத்தை பொறுத்து பாகப்பிரிவினை கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்ட முழு சொத்துக்கும் பாகம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் மீதம் உள்ள சொத்துக்களை பொறுத்து மற்ற நபர்கள் பாகத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு விட்டார்கள் ஆஜர் எதிரிகள் மட்டும் அவர்களது சொத்தை பொருத்து எனக்கு பாகம் கொடுக்க மறுத்து வருகிறார்கள்.

3. மேற்படி வரதராஜன் உயிரோடு இருக்கும் போது நானும் எனது குடும்பத்தாரும் மேற்படி அவர் சொத்துக்களை அனுபவித்து வருவதற்கு தொந்தரவு செய்யக்கூடாது என்று O.S. 66/2019 என்ற எண்ணில் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். வரதராஜன் இறந்த பின்னிட்டு அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டு அந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்தே எதிரிகள் அவர்கள் நிலத்தை உழவு செய்ய விடாமல் நான் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல வரதராஜன் இருக்கும் போது இருந்தே நான் ஓட்டக்கூடாது என்று தடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

4. நான் மேற்கண்டவாறு தொடர்ந்து தடுத்து வருவதால் நங்கவள்ளி காவல் நிலையத்தில் இரண்டு மூன்று முறை புகார் கொடுத்து என்னை அழைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனக்கு தேதிகள் தெரியும் .ஆனால் எழுத படிக்க தெரியாது. 04.07.2022—ஆம் தேதி காட்டை உழவு செய்வதற்காக ஆஜர் எதிரி குமுதவல்லி மற்றும் சேதுவராயன் ஆகிய இருவரும் காட்டில் புல் பூண்டுகளை பிடுங்கி கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் எனது மகன்கள் திருநாவுக்கரசு மற்றும் ராமலிங்கம் எனது அண்ணன் மகன் பெரியண்ணன் ஆகியோர் சேர்ந்து கொண்டு உழவு செய்வதை தடுத்தோம் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் புல் பூண்டு பிடுங்கி உழவு செய்யக்கூடாது என்று தடுத்தேன். நான் அப்போது மாடு மேய்த்துக் கொண்டிருந்தேன் மற்றவர்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை.

5. நான் மட்டும் தான் சம்பவ இடத்திலிருந்து சொல்லி உள்ள நிலையில் எனது மகன்கள் மற்றும் அண்ணன் மகனை எதிரிகள் அடித்து விட்டதாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல என்னை அடிப்பதை பார்த்து ஓடி எனது மகன்களை எதிரிகள் அடித்து விட்டார்கள். திருநாவுக்கரசு மட்டும் தான் ஓடி வந்தார் . இந்த சம்பவம் ஒரு அரை மணி நேரம் நடந்திருக்கும்.
6. எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் எதிரிகளின் அனுமதி பெற்று மாடு மேய்த்தீர்களா என்றால் அது என்னுடைய நிலம். பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தேன் என்ற ஒரே காரணத்தை வைத்து எதிரிகள் அனுபவம் செய்து வரும் நிலத்தில் உள்ளே நுழைந்து அனுபவம் செய்வேன் என்பது சரியானது அல்ல என்றால் சரியல்ல. எனது மகன்கள் அனைவரும் காட்டில் உழவு செய்யக்கூடாது என்று எதிரிகளை அடித்து எதிரிகள் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் மருத்துவமனையில் இருந்தார்கள் எனது மகன்கள் அடித்த காரணத்தால் மருத்துவமனையில் இல்லை. மேற்படி எதிரிகள் காயம் பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதை பற்றி தெரிந்து கொண்டு அந்த வழக்கில் இருந்த தப்பிப்பதற்காக என்னையும் எனது மகன்களையும் தாக்கி விட்டதாக பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்ல.
7. புகாரை போலீசார் நான் சொல்வதைக் கேட்டு எழுதி கொண்டு என்னிடம் படித்துக் காட்டி தான் கைரேகை வாங்கினார்கள். ஒரு கைரேகை தான் வாங்கினார்கள். என்னையும் எனது மகன் ராமலிங்கத்தையும் இரும்பு ராடால் என்னை தாக்கவில்லை என்றால் சரியில்ல மாடு கட்டும் இரும்பு கம்பியால் என்னை அடித்தார்கள். அதைத்தான் இரும்பு ராடு என்று நான் சொல்கிறேன். ராடா கம்பி என்று எனக்கு தெரியவில்லை நான் கீழே கிடந்தேன் நான் கவனிக்கவில்லை. நான் சொன்ன மாதிரி எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை என்றாலும் நாங்கள்தான் எதிரிகளை தாக்கினோம் என்றாலும் சரியல்ல நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரேகை வைத்து புகார் கொடுத்த பின்பு என்னை விசாரிக்கவில்லை.
8. நான் காயம் ஏற்படுத்தியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றாலும் எதிரிகளை நிலத்தை கண்ட்ரோலியே கண்ட்ரோல் அவ்வளவுதான் அதை உருட்டி இருக்காது அபகரிக்க வேண்டி

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.30PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.256/2024

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமலிங்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| கிராமம் | : | பழக்காரனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.47PM.)

1. நான் தற்போது பலக்காரனூரில் குடியிருக்கிறேன். நான் தனியார் மில்லில் வேலை செய்கிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் காடு சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. 04.07.2022ம் தேதி காலை 9.30 மணி அளவில் காட்டில் எனது அம்மா மாடு மேய்த்து கொண்டிருந்தபோது அங்கு எதிரிகள் குமுதவள்ளி

,சேதுவராயன், தமிழ்செல்வன் ஆகியோர்கள் பூண்டு பிடுங்கி கொண்டிருந்தார்கள்.

2. எனது அம்மா பிரச்சினை இருக்கும்போது ஏன் பிடுங்குகிறீர்கள் என்று கேட்டதற்கு குமுதவள்ளி எனது அம்மாவை அப்படிதாண்டி தேவடியா புடுங்குவோம் என்று திட்டி எனது அம்மாவின் முதுகில் அடித்து தள்ளி விட்டார். சேதுவராயன் காலால் வலது அள்ளையில் எட்டி உதைத்தார். தமிழ்செல்வன் சண்டையை தடுத்தார். அதை பார்த்து நானும் சென்று சண்டையை விலக்கி விட்டபோது எதிரி சேதுவராயன் கீழே கிடந்து கட்டு கம்பியை கையில் சுத்தி பின் கழுத்திலும் முகத்திலும் அடித்தார்.
3. எதிரி சேதுவராயன் என்னையும் எனது அம்மாவையும் இனி மேல் காட்டுக்குள் வந்தால் கொன்றுவிடுவதாக மிரட்டினார். சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து எதிரிகள் சென்று விட்டனர். எனது தம்பி திருநாவுக்கரசு என்னையும் எனது அம்மாவையும் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் கொண்டு சேர்த்தார். போலீசார் மருத்துவமனைக்கு விசாரிக்கு வந்தபோது உதட்டில் ஏற்பட்ட காயத்தினால் என்னால் பேச முடியவில்லை. என்னுடைய அம்மா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்(12.57PM.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்(04.32PM.)

1. நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். கையெழுத்து போடுவேன் ஆனால் எழுத தெரியாது. எழுத்துக்கூட்டி ஓரளவுக்கு படிப்பேன். எனது அம்மாவின் மீதும் எனது குடும்பத்தார் மீதும் ஆஜர் எதிரியின் கணவர் வரதராஜன் அவர் கிரயம் வாங்கிய நிலத்தில் தொந்தரவு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதில் இரண்டாவது பிரதிவாதியாக நான் உள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.
2. எனக்கு தெரிந்து 30 வருடங்களாக வரதராஜன் குடும்பத்தார் அதில் உழவு செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல எனக்கு தெரிந்து ஒரு 12 வருடங்களாக

அது குறையாக தான் இருக்கிறது. அதற்கு முன்பாக யார் உழவு செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது அம்மா வரதராஜன் நிலத்திலும் மற்ற நிலத்திலும் தனக்கு பாகம் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வரதராஜன் உயிருடன் இருக்கும்போதே மேற்படி வரதராஜன் நிலத்தில் உழவு செய்யக்கூடாது என்று எனது அம்மாவும் நாங்களும் சென்று ஒப்படை செய்தோம் என்றாலும் இது சம்பந்தமாக நங்கவல்லி காவல் நிலையத்தில் இரண்டு மூன்று புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

3. அங்கு நடைபெற்ற விசாரணையில் அவரவர் வாங்கிய நிலத்தை அவரவர் அனுபவம் செய்து கொள்ளலாம் என்றும் மற்றவர் நிலத்தில் தொந்தரவு செய்யக்கூடாது எனவும் நீதிமன்றத்தில் அணுகி பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுமாறும் சொன்னார்கள். எனது அம்மா பெயரில் நிலம் ஒதுக்கியதாக ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. 1964–ஆம் வருடமே எனது தாத்தா முதல் மனைவி குழந்தைகளுக்கும் இரண்டாவது மனைவி குழந்தைகளுக்கும் பாகம் செய்து கொடுத்து அதை பல்வேறு நபர்கள் கிரயம் பெற்று அவரவர் தனித்தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் கொடுக்கப்பட்ட நிலத்தில் தான் போய் உழவு செய்யக்கூடாது என்று நாங்கள் பிரச்சினை செய்து வருகிறோம் என்றால் அந்த நிலம் வரதராஜனுக்கு தான் சொந்தமா என்று எனக்கு தெரியாது எனது அம்மாவுக்கு தான் சொந்தமா என்றும் எனக்கு தெரியாது.

4. கடந்த 35 வருடமாக வரதராஜன் பெயரில் பட்டா உள்ளது என்றாலும் அவரது இறப்புக்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் பெயரில் பட்டா உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த நிலத்தில் ஒரு அட்டை வீடு உள்ளது அதில் எதிரிகள் குடி இருக்கிறார்களா அல்லது அவர்களது சொந்த வீட்டில் குடியிருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. அந்த வீட்டுக்கு நாங்கள் அங்கு செல்வதில்லை என்றால் சரிதான்.

5. 04.07.2022–ஆம் தேதி ஆஜர் எதிரிகள் அவர்களது காட்டை உழவு செய்வதற்காக புல்பூண்டுகளை புடுங்கி கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். எனது அம்மா மேற்படி புல் பூண்டுகளை பிடுங்குவதை தடுத்தார் தடுத்ததால் என் அம்மாவை அடித்த பிறகு தான் நாங்கள் அங்கு சென்றோம்.

அடுத்தவர்கள் பெயரில் பட்டா உள்ள நிலத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்து உழவு செய்வதை தடுப்பதும் மாடு கட்டி வைப்பதும் தவறு என்றால் அவர்களின் பெயரில் பட்டா உள்ளது எனக்கு தெரியாது.

6. சம்பவத்தன்று எனது அம்மா எனது சகோதரர் மற்றும் எனது மாமா மகன் ஆகியோர் சேர்ந்து நிலத்தை எதிரிகள் உழவு செய்யக்கூடாது என்று எதிரிகளை அடித்து விட்டோம் என்றால் எதிரிகள் எங்களை அடித்தார்கள் எனது அம்மாவை நான் சென்று கூட்டி வந்தேன். அங்கு சென்றதுக்கு என்னை அடித்தார்கள். நான் கட்டையால் எதிரி சேதுவராயன் கன்னத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து 1–ஆம் எதிரி குமுதவல்லி எட்டி உதைத்து கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

7. அதனால் எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றாலும் அதை தெரிந்து கொண்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி என்னையும் எனது குடும்பத்தாரையும் அடித்து விட்டதாக பொய் புகார் அளித்து பொய் சாட்சியும் அளிக்கிறோம் என்றால் சரியில்லை. நான் சொன்னவாறு எதிரிகள் எங்களை அடிக்கவோ காயப்படுத்தவோ இல்லையென்றால் சரியல்ல.

8. எதிரிகள் என்னை இரும்புராடால் அடிக்க வில்லை கட்டு கம்பியால் அடித்தார்கள் அது கூடை கட்டும் கம்பியாகும். மருத்துவமனையில் மருத்துவர் என்னை பரிசோதனை செய்யும்போது நான் சுயநலமுடன் தான் இருந்தேன். இரும்புராடல் அடித்ததாக மருத்துவரிடம் நான் சொல்லவில்லை கட்டுக்கம்பியால் அடித்ததாக தான் சொன்னேன் அந்த கட்டுக் கம்பியை கையில் சுற்றிக்கொண்டு அடித்தார்கள். நான் சொல்வது கட்டுக்கதை என்றாலும் நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரி இல்லை. சம்பவம் நடந்து இரண்டு ஒரு நாட்களுக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் விசாரித்த போது நான் மேற்படி விபரங்களை தான் நான் தெரிவித்தேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.59PM.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.